**முதலாவது கூடுதல் சார்பு நீதிமன்றம், விழுப்புரம்**
**O.S. No. 491/2022**

**Witness PW 3**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சி. ராமலிங்கம் | தொழில் | |
| த/பெ | சின்னத்தம்பி | வயது | |
| ஊர் | | தேதி | 16.03.2026 |
| மாவட்டம்; | | | |

இன்று (16.03.2026) சாட்சி சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

**முதல் விசாரணை**
**சத்தியமாக சொல்கிறேன்**

நான் தற்போது மாவட்ட துணை கண்காணிப்பாளராக மாவட்ட குற்றப்பிரிவில் பணி செய்து வருகிறேன். எனக்கு நீதமன்றத்தில் இருந்து கிடைக்கப்பெற்ற அழைப்பாணை வாயிலாக சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். 26.02.2022 ம் தேதி உதவி ஆய்வாளர் மாவட்ட குற்றப்பிரிவு விழுப்புரம் என்பவர் வேல்முருகன் த/பெ மாசிலாமணி, வெட்டுக்காடு,ராதாபுரம் என்பவருக்கு அழைப்பாணை அனுப்பியுள்ளார். அது **சா.சா.ஆ 1** ஆக குறியீடு செய்யப்படுகிறது.வேல்முருகன் என்பவர் கொடுத்தபுகாரின் பேரில் எங்கள் அலுவலகத்தில் வைத்து விசாரணை நடத்தப்பட்டது. அதற்கான வழக்கு கோப்புகளை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்கிறேன். மேற்படி ஆவணம் **சா.சா.ஆ 2** ( 6 எண்ணிக்கை) ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி ஆவணங்கள் குறியீடு செய்ய பிரதிவாதி தரப்பில் மேற்படி ஆவணங்கள் நகல் என்பதால் குறியீடு செய்ய ஆட்சேபனை செய்யப்பட்டு ஆட்சேபனை குறிப்பு எடுக்கப்பட்டுள்ளது. வாதி மற்றும் பிரதிவாதிக்கு இடையே விசாரணை பதிவு செய்யப்பட்டுள்ளது அது இரு தரப்பினரும் எழுதி கொடுத்த வாக்குமூலங்கள் இணைக்கப்பட்டுள்ளது. தாமோதிர ராஜா என்பவர் அவர் ஒப்புக்கொண்டு எழுதி கொடுத்துள்ளது போல் பணத்தை செலுத்தாத காரணத்தினால் நீதிமன்றம் சென்று உரிய பரிகாரம் தேடி கொள்ளும்படி கூறி அந்த புகார் முடிக்கப்பட்டுள்ளது.

**குறுக்கு விசாரணை**

எனக்கு நீதிமன்றத்தில்இருந்து அனுப்பபட்ட அழைப்பாணையில் எந்த எந்த ஆவணங்கள் எடுத்து வரவேண்டும் என்று குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்றால் புகார் சம்மந்தமான அனைத்து ஆவணங்களையும் எடுத்துவரும்படி அறிவுறுத்தப்பட்டிருந்தது. புகார் விசாரணை இருந்த சமயத்தில் நான்

விசாரணை அதிகாரியாக இல்லை ஏற்கனவே இருந்த விசாரணை அதிகாரி விசாரித்து வைக்கப்பட்டிருந்த ஆவணங்களை நான் தாக்கல் செய்துள்ளேன். நான் நீதிமன்றத்திற்கு எடுத்து வந்துள்ள அசல் ஆவணங்கள் இல்லை என்றாலும் நகல் தான் உள்ளது என்றாலும் சரி அசல் ஆவணங்கள் இல்லை. நீதிமன்றத்தில் இருந்து அனைத்து ஆவணங்களையும்த எடுத்து வரும்படி கோரப்பட்டுள்ள நிலையில் அசல் ஆவணங்களை தான் நான் நீதிமன்றத்திற்கு எடுத்து வந்திருக்க வேண்டும் என்றால் நகல் ஆவணங்கள் மட்டும் தான் வழக்கு கோப்பில் இருந்தது. அசல் ஆவணங்கள் இல்லாமல் நகல் ஆவணங்கள் மட்டும் வழக்கு கோப்பில் இருந்திருக்க வாய்ப்பில்லை என்றாலும் இந்த ஆவணங்கள் பின்னிட்டு தயார் செய்யப்பட்ட ஆவணங்கள் என்றால் சரியல்ல. பொதுவாக குற்றம் சம்மந்தப்பட்ட வழக்குகளை மட்டும் தான் விசாரணை செய்ய வேண்டும் என்றாலும் கடனுறுதி சீட்டு தொடர்பான வழக்குகளை விசாரணை செய்யும் அதிகாரம் எங்களுக்கு இல்லை என்றால் காவல் நிலையத்தில் கொடுக்கப்படும் எந்தவிதமான புகாராக இருந்தாலும் அதன் தன்மையை கருதி முதற்கட்ட விசாரணை நடத்தப்படும். புகார் கொடுக்கும்போது கடனுறுதி சீட்டின் வைத்து தான் அனுப்பப்பட்டது என்றால் எங்களிடம் நேரடியாக புகார் கொடுக்கப்படவில்லை மாவட்ட கண்காணிப்பாளர் அலுவலகத்தில் புகார் பெறப்பட்டு எங்களுக்கு அது அனுப்பிவைக்கப்பட்டது. புகார் தொடர்பாக முதல் தகவல் அறிக்கை எதுவும் தாக்கல் செய்ய உத்தரவு இல்லை என்றாலும் ஆவணத்தை பரிசீலனை செய்யும்போது அவ்வாறு எந்த உத்தரவும் பதிவு செய்யப்படவில்லை. பிரதிவாதியால் உத்தரவாத கடிதம்எழுதப்பட்டிருந்தால் அதனை நீதிமன்றத்தில் உரிய வண்ணத்தில் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் என்றால் வழக்கு கோப்பிலிருந்த ஆவணங்களை நான் தாக்கல் செய்யவில்லை அசல் ஆவணங்களை வழக்கு கோப்பில் வைத்து தான் பராமரிக்கப்படும் என்றால் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டிருந்தால் அனைத்து அசல் ஆவணங்களும் வழக்கு கோப்பில் இருந்திருக்கும். மனு நிலையில் உள்ள ஆவணங்கள் 3 ஆண்டுக்கு மேல் வழக்கு கோப்புகளில் வைத்திருக்க வாய்ப்புகள் இல்லை. நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் எந்த தேதியில் யாரால் நகல் எடுக்கப்பட்டது என்ற பதிவு அதில் குறிப்பிடபடவில்லை என்றால் சரி. புகார்தாரர் மற்றும் எதிர்மனுதாரர் எந்தெந்த அதிகாரி விசாரணை செய்தார் என்ற விவரங்கள் இந்த ஆவணத்தில் உள்ளதா என்றால் உள்ளது. 01.08.2022 ம் தேதி பிரதிவாதியான தாமோதிர ராஜா என்பவர் அவரது வழக்கறிஞர் வாயிலாக ஒரு வழக்கறிஞர் அறிவிப்பினை மாவட்ட துணை காவல் கண்காணிப்பாளர் விழுப்புரம் என்பவருக்கு அனுப்பியுள்ளார் என்றாலும் அந்த ஆவணம் இந்த வழக்கு கோப்பில் இல்லை என்றால் அந்த ஆவணம் வழக்கு கோப்பில் இல்லை. பிரதிவாதி தரப்பு உண்மை ஆவணங்களை மறைத்து விட்டு வாதி கூறியதன் பேரில் அவருக்கு ஆதரவான ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அதனால் தான் அசல் ஆவணங்களும் இதர ஆவணங்களும் நீதிமன்றத்தில் தாக்கல்

செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. உண்மை நகல் யார் சான்றிட்டுள்ளனர் என்றால் யார் நகல் எடுக்கிறார்களோ அவர்கள் கையொப்பம் செய்வார்கள். வழக்கு ஆவணங்களை இல்லாத சூழலில் எதன் அடிப்படையில் உண்மை நகல் என கையொப்பம்செய்யப்பட்டுள்ளது என்றால் 16.03.2026 அன்று வழக்கு கோப்பில் இருந்து நகல் எடுத்ததால் இன்றைய தேதி என்று கூறி உண்மை நகல் என சான்றளக்கப்பட்டுள்ளது. அசல் ஆவணத்தை நகல் எடுப்பது தான் உண்மை நகல் என்று சொன்னால் சரி. நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் உண்மையான ஆவணங்கள் இல்லை என்பதால் நீதிமன்றத்தில் சாட்சியாக ஏற்றுக்கொள்ள இயலாது என்றால் சரியல்ல.

Taken down before me in Open Court and read over/interpreted to the witness and acknowledge by him/her to be correct.

(Sd/-M.S. Varalakshmi)
I Additional Subordinate Judge,
Villupuram